புரட்சிப்
பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஜூலை (July), 16, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 29 • விலை(PRICE) ரூ.6.00

தடை, அதை உடை!

இடிப்போம் ஜாதிச் சுவரை! உடைப்போம் இந்த பழைய பூட்டை!
ஒரே குரலில் முழங்குவோம்! "நாமெல்லாம் ஒன்று"

இப்படி நாம் கூறினால் எதிர்ப்பு வருகிறது. நீ வேறு; நான் வேறு; எப்படி சமமாக முடியும்? இப்படித்தான் நமது சமூகம் கேட்கிறது. 3,000 ஆண்டுகளுக்கு மேலாக தீர்க்கப்படாத கணக்கு இது . இந்தத் தடை உடைய வேண்டாமா? இந்தக் கேள்வியுடன் தான் நாங்கள் உங்களிடம் வருகிறோம். கல்வியும் கால மாற்றமும் இளையோருக்கு இட ஒதுக்கீடு வழங்கியுள்ள வேலை வாய்ப்பு, சம வாய்ப்பு, சந்திப்பு காதலை நோக்கி நகர்த்துகிறது. ஆனால் ஜாதி அதற்குத் தடை போடுகிறது. வாழ வேண்டிய இளையோர் வாழ்க்கையையே தடுக்கிறது; இல்லையேல் ஆணவக் கொலை என்று வாழ்க்கையே முடிக்கிறது.

★ ஜாதி பிறப்பிலிருந்து இறப்பு வரை ஒவ்வொரு இந்து மீதும் பிரிக்க முடியாமல் ஒட்டப்படும் ஸ்டிக்கர்.

★ ஜாதி விலை கொடுத்து பத்திரம் எழுதி வாங்கிய சொத்தா?

★ பல்கலைக்கழகத்தில் படித்து வாங்கிய பட்டமா? இல்லை இல்லை; இது திணிக்கப்பட்ட அடையாளம். சொல்லப்போனால் **விலையில்லாமல் கிடைக்கும் இலவசம்.** கேட்காமலே ஒட்டிக் கொள்ளும் ஜாதி எப்படி வந்தது தெரியுமா?

இதோ ஒரு சிறு விளக்கம்: பார்ப்பனர்கள் உருவாக்கிய மாபெரும் சதி! சமூகத்தை பிறப்பின் அடிப்படையில் கூறு போட விரும்பியவர்கள் ஒரு கதையை உருவாக்கினார்கள். கதையின் ஹீரோ பிரம்மா எனும் கடவுள்; அந்த கடவுள் தனது தலையில் இருந்து பிராமணர்களையும், அதற்குக் கீழே தோளிலிருந்து சத்திரியர்களையும், அதற்குக் கீழே தொடையிலிருந்து வைசியர்களையும், எல்லோருக்கும் கீழே காலில் இருந்து அடிமைக் கூட்டமாக சூத்திரர்களையும் படைத்ததாக ஒரு கதையை எழுதினார்கள். 'ரிக்' வேதத்தின் புருஷ சூக்தம் 16-வது பிரிவிலும், சுக்ல, யஜுர் வேதத்தில் 22- ஆவது பிரிவிலும், அதர்வண வேதத்தில் 16-வது பிரிவிலும் இருக்கிறது இந்த புருஷ சூக்தம் என்ற இழிவு. இந்த வேதத்திற்கு விளக்கம் கூற அரச கட்டளைகளைப் போல் வந்தது மனு சாஸ்திரம் என்ற கொடூரமான சட்டம். 'பிராமணன்' எந்த குற்றம் செய்தாலும் தண்டிக்கப்படக் கூடாது; வணங்க வேண்டும்; கடவுளே அவனது வேத மந்திரத்துக்கு கட்டுப்பட்டவர் என்று கூறியது அந்த சாஸ்திரம். சூத்திரனுக்கு எந்த உரிமையும் இல்லை; அவன் அடிமை, பிராமணர்களின் உல்லாசக் காதலிகளான வைப்பாட்டிகளுக்குப் பிறந்தவர்கள் என்று சூத்திரர்களை அது இழிவு செய்தது.

ஆனால் இந்த வர்ணாசிரம பாகுபாடுகளையும் தாண்டி சமூகத்திலேயே உறவுகள் நிகழ்ந்தன; குழந்தைகளும் பிறந்தன; அந்த குழந்தைகளை மீண்டும் எந்த வர்ணத்திலும் சேர்க்க முடியாது என்பதால் ஜாதிகளை உருவாக்கினார்கள் பார்ப்பனர்கள்; அதற்குத் தொழிலையும் வரையறுத்தார்கள். பெரியார் அம்பேத்கர் போன்ற தலைவர்களின் போராட்டத்தால் கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகள் வந்தன. ஜாதித் தொழில் கட்டமைப்பு கலகலக்கத் தொடங்கியது. ஆனால் ஜாதியின் கோரத்தாண்டவம் தொடர்கிறது.

★ ஒவ்வொரு மனிதருக்கும் தனித்தனி ஜாதி அடையாளங்கள் இருக்கிறதா? இல்லை; ஆனால் செயற்கையாக இந்து தர்மம் பூணூலையும், விபூதி, நாமத்தையும் போட வைத்து இருக்கிறது.

★ உறுப்பு மாற்று மருத்துவம் வந்துவிட்டது; ஒரு ஜாதிக்காரரின் உறுப்பு வேறு ஒரு ஜாதிக்காரருக்கு பொருத்தி உயிர் காப்பாற்றப்படுகிறது. அந்த நேரத்தில் வேறு ஜாதிக்காரர் உறுப்பை எனது ஜாதிக்கு பொருத்த வேண்டாம் என்று கூறுவார்களா? நிச்சயம் கூற மாட்டார்கள்!

★ தனது ஜாதிக்குள் தான் திருமணம் செய்வேன் என்று அடம் பிடிக்கும் வணிகர்களும், தொழில் முனைவோரும், மருத்துவரும்,பொறியாளரும், தங்கள் ஜாதிக்காரர்களுக்கு மட்டுமே வணிகம் செய்வோம் என்று கூறுவார்களா?

மதத்தில் பார்ப்பனியம்

★ " நாம் அனைவரும் இந்துக்கள்; அதுவே நமக்கு அடையாளம்; அதுவே நமக்கான நாடு" என்ற மதவெறி இப்போது பரப்பப்படுகிறது. இதில் உண்மை இருக்கிறதா?

★ இந்து என்ற ஒரே அடையாளத்துடன் தான் நாம் வாழ்கிறோமா?

★ இந்து என்பதைவிட ஜாதி தான் இப்போது முதன்மையான அடையாளம்.இந்து ஒற்றுமை பேசுகிறவர்கள் ஜாதி வேண்டாம் என்று பேசுகிறார்களா?

★ வெவ்வேறு ஜாதி இந்துக்களுக்குள் நடக்கும் திருமணத்தை ஏன் இவர்கள் ஆதரிப்பதில்லை? அது இந்துக்களுக்கு இடையே நடக்கும் திருமணம் தானே!

★ இந்துக்களுக்குள்ளேயே நடக்கும் ஆணவப் படுகொலைகளை ஏன் கண்டிப்பதில்லை?

★ பெரும்பான்மையான இந்துக்கள் அசைவ உணவையே உண்கிறார்கள். ஆனால் இந்து மதம் இந்த உணவு முறையை புனிதமற்றது என்று ஏற்க மறுக்கிறது. உழைக்கும் இந்துக்களின் மாட்டுக்கறி உணவை தண்டிப்பதோடு அவர்களை கொலை செய்யவும் தயங்குவதில்லை!

★ பெரும்பான்மை இந்துக்கள் பேசும் தமிழ் மொழியை கடவுளின் மொழியாக ஏற்க ஏன் மறுக்க வேண்டும்?

★ சமஸ்கிருதம் தான் கடவுள் மொழி என்று ஏன் திணிக்க வேண்டும்?

★ அனைத்து இந்துக்களும் அர்ச்சகராக முடியாது; பிராமண இந்துக்கள் மட்டுமே கடவுளிடம் நெருங்க முடியும் என்று உச்சநீதிமன்றம் வரை சென்று வழக்காடுவது ஏன்?

★ இந்து மதச் சடங்குகளை செய்யும் அனைத்து உரிமைகளும் பார்ப்பன இந்துக்களுக்கு மட்டும்தானா? பார்ப்பனரல்லாத இந்துக்களுக்கு ஏன் மறுக்க வேண்டும்?

★ குடியரசுத் தலைவர், பிரதமர் போன்ற உயர் அதிகாரம் படைத்தவர்கள் கூட சட்டை போடாமல் பூணூல் மேனியுடன் காட்சி அளிக்கும் "பிராமண" இந்துக்களிடம் தான் ஆசி பெற வேண்டுமா?

★ இந்துக்களையும்- இந்து மதத்தையும்- மொழியில், உணவில்,வழிபாடுகளில், பண்பாடுகளில் பார்ப்பனியமே ஆட்டிப் படைக்கிறது! எத்தனை ஆண்டு காலம் பெரும்பான்மை இந்துக்கள் இதை அனுமதிக்கப் போகிறார்கள்? சுயமரியாதையுடன் போராட வேண்டாமா?

வாழ்வியலில் மூடநம்பிக்கை

★ சனாதனம் விதித்த தடைகளை எதிர்த்து தான் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இந்துக்களுக்கும், இந்துப் பெண்களுக்கும் கல்வி முன்னேற்றமே வந்தது. கிடைத்த கல்வி குடும்பத்தில் பெண்கள் உரிமையைக் கொண்டு வந்து விடவில்லை; மூடநம்பிக்கைகளையும் ஒழித்து விடவில்லை.

★ சாமியாரிடம் போய் பெண்கள் நகைகளைப் பறி கொடுப்பதும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாவதும் அன்றாட செய்திகளாகிவிட்டன. இதுவரை எந்த ஒரு சாமியாரும் அற்புதங்களை நிகழ்த்தவில்லை! இயற்பியல் விதிகளுக்கு மாறாக எந்த ஒரு அற்புதமும் நடக்காது என்பதுதான் அறிவியல். கடவுளே வந்தாலும் அவர் இயற்பியல் விதிகளுக்கு உட்பட்டு தான் வாழ வேண்டும். அனைத்து சாமியார்களுமே போலி சாமியார்கள் தான்; நல்ல சாமியார் என்று எவரும் இல்லை!

★ அறிவியலுக்கு எதிரானது வாஸ்து; வாஸ்து பார்த்து கட்டப்படும் வீட்டில் வாழும் குடும்பங்களில் பிரச்சனைகளே இல்லையா? பெரும் வெள்ளம் வரும் போதும் நிலநடுக்கம் வரும்போதும் வாஸ்து பார்த்து கட்டப்பட்ட வீடுகள் சிதைந்து விடாமல் தப்பி விடுகின்றனவா? இல்லையே!

★ விவாகரத்து வழக்குகளில் ஜோதிடப் பொருத்தம் பார்த்து நடத்தப்படும் திருமணங்கள் பெரும்பான்மையாக இருப்பது ஏன்?

★ இறந்து போன உறவினர்களின் ஆன்மா வானத்தில் உலவுகிறது என்ற மூடநம்பிக்கையில் பார்ப்பனர்களை அழைத்து திதி கொடுப்பது ஏன்? கிரகங்களுக்கு விண்வெளிப் பயணம் போகிற விஞ்ஞானிகள் யாராவது அங்கே ஆன்மாக்கள் உலவுகின்றன என்று இதுவரை கூறியதே இல்லையே! சொர்க்கம் நரகம் என்ற கிரகங்கள் இல்லையே; சமஸ்கிருத மந்திரத்தின் சக்தி பொருட்களை 'மோட்சத்தில்' கொண்டு சேர்க்கிறது என்று இந்த அறிவியல் யுகத்திலும் நம்ப முடியுமா?

- இப்படி எத்தனையோ மூடநம்பிக்கைகள் சமூகத்தை ஆட்டிப் படைக்கின்றன.

ஒன்றைத் தெளிவாக புரிந்து கொள்வோம்!

சமுதாயத்தில் மக்களிடம் ஏற்படும் மாற்றங்கள் தான் முன்னேற்றத்திற்கான கதவுகளைத் திறந்து வைக்கும்.

ஆட்சிகள் மாறலாம்;சட்டங்கள் வரலாம்; ஆனால் சமுதாய மாற்றம் வரும் போது தான் சட்டங்களே வெற்றி பெறும். இந்த மாற்றத்துக்கான சிந்தனைகளைப் பரப்புவதே இந்தப் பயணத்தின் நோக்கம்!

தடைகளைத் தகர்ப்போம்! சமத்துவ வாழ்வியலை முன்னெடுப்போம்!

- திராவிடர் விடுதலைக் கழகம்
(பரப்புரைக்கான துண்டறிக்கை)

தலையங்கம்

வி.பி.எஸ்.ஏ ஆபத்து

உயர் கல்வியை முழுமையாக மாநிலக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுவித்து தனது ஆளுகைக்குக் கீழே கொண்டு வரும் மசோதா ஒன்றை ஒன்றிய ஆட்சி 2025-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தது. இந்த மசோதா கடுமையான எதிர்ப்புக்கு உள்ளானதால் நாடாளுமன்ற கூட்டுக்குழு பரிசீலனைக்கு வந்துள்ளது. 31 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். குழுவின் தலைவர் பாஜகவைச் சேர்ந்த டி.குடந்தீஸ்வரி.

உயர் கல்விக்கான பல்கலைகழக மானியக் குழு, அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சில், ஆசிரியர் கல்விக்கான தேசிய கவுன்சில் ஆகிய அமைப்புகள் கலைக்கப்படுகின்றன. வி.பி.எஸ்.ஏ (விக்சித் பாரத் சிக்க்ஷா ஆதிஷ்டான்) என்ற ஒரே அமைப்பின் கீழ் இந்த அனைத்து அமைப்புகளையும் கொண்டு வருகிறது இந்த புதிய சட்டம். இதன் வழியாக உயர்கல்வியின் முழுமையான அதிகாரத்தை ஒன்றிய ஆட்சி எடுத்துக் கொள்கிறது. மாநிலங்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகங்களை நடத்தும் உரிமை மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆபத்தான சட்டத்தை பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களே கடுமையாக எதிர்க்கின்றன. ஒன்றிய ஆட்சியின் கூட்டணியில் இடம் பெற்றுள்ள தெலுங்குதேசம் 'இந்தச் சட்டத்தின் பிரிவுகள் மாநிலங்களின் சட்டம் இயற்றும் அதிகாரங்களைப் பறிப்பதோடு மாநில உரிமைக்கு மரண பத்திரம் எழுதுகிறது' என்று கூறியுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களுக்கு பட்டம் வழங்கும் உரிமைகள் மாநில அரசுகளிடம் இருந்து பறிக்கப்பட்டு ஒன்றிய ஆட்சியின் ஒழுங்குமுறைக் குழுவிடம் இந்தச் சட்டத்தின் வழியாக ஒப்படைக்கப்படுகிறது. இது அரசியல் சட்டத்திற்கே எதிரானது என்று ஆந்திராவின் தெலுங்குதேச கட்சி தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

இதேபோல் பாஜக ஆட்சி நடத்தும் மத்திய பிரதேசம், மேகாலயா மாநிலங்களும் இந்தச் சட்டத்திற்கு கடும் எதிர்ப்பை நாடாளுமன்றக் குழுவிடம் தெரிவித்துள்ளனர். மாநில ஆட்சிகள் மட்டுமல்ல காசி இந்து பல்கலைக்கழகம், ராஜஸ்தான் மத்திய பல்கலைக்கழகம், சித்தூர் அய்.அய்.டி மற்றும் அசாம், மகாராஷ்டிரா, ஜம்மு காஷ்மீர் பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கழக சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் இந்த மசோதா பறிக்கிறது என்று எதிர்ப்புகளைத் தெரிவித்துள்ளனர்.

மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிக்காமலே ஒன்றிய ஆட்சி இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தின்படி பல்கலைக்கழகங்களுக்கான கொள்கை முடிவுகளையும், பாடத்திட்டங்களையும், கல்வித் தரத்தையும் நிர்ணயிக்கும் உரிமை இந்த வி.பி.எஸ்.ஏ சட்டத்திற்கு மட்டுமே உண்டு. இந்தச் சட்டம் அமலுக்கு வந்து விட்டால் தேசியமொழிக் கொள்கையையும் அதன் வழியாக சமஸ்கிருதத்தையும் தமிழ்நாட்டு கல்லூரிகளில் பல்கலைக்கழகங்கள் வழியாகத் திணிக்கப்படும் ஆபத்து உருவாகியிருக்கிறது.

நிதி ஒதுக்கும் அதிகாரம் அதிகாரிகளிடமிருந்து பறிக்கப்பட்டு அமைச்சர்களுக்குப் போகிறது. எனவே அமைச்சர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப பல்கலைக்கழகங்களுக்கு நிதி ஒதுக்கிடும் ஆபத்துகள் உருவாகி உள்ளன.

ஒன்றிய ஆட்சி தொடர்ந்து கல்வித் துறையில் குறுக்கிட்டு வருகிறது. மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு நீட் தேர்வைத் திணித்தார்கள். இப்போது அந்தத் தேர்வு மோசடிகளுக்கு உள்ளாகி மாணவர்களின் தற்கொலைகளுக்குக் காரணமாகி வருகிறது. தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் இருமுறை தீர்மானங்கள் நிறைவேற்றியும் கூட ஒன்றிய ஆட்சி மறுத்துக் கொண்டிருக்கிறது. அதேபோல் தமிழ்நாட்டில் உள்ள மத்திய பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கு க்யூட் (CUET) என்ற நுழைவுத் தேர்வு திணிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இயங்கும் பல்கலைக்கழகங்களுக்கு இதிலிருந்து விலக்கு கேட்கப்பட்டது; ஆனால் ஒன்றிய அரசு மறுத்துவிட்டது.

தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் தான் பல்கலைக் கழகங்களுக்கான நிதியைத் தருவோம் என்கிறார்கள்; தேசியக் கல்விக் கொள்கையின் மாதிரிப் பள்ளியான பி.எம்.ஸ்ரீ பள்ளிகளை அனுமதித்தால்தான் சட்டப்படி தரவேண்டிய தமிழ்நாட்டுக்கு உரிமையான கல்வி நிதியை வழங்க முடியும் என்று ஒன்றிய அரசு மிரட்டுகிறது.

கல்வி பொதுப்பட்டியலில் இருந்தாலும் மாநில அரசுக்கும் உரிமை உண்டு. இந்த உரிமையை ஒன்றிய ஆட்சி புறக்கணித்து தன்னிச்சையாகவே செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் சி.பி.எஸ்.இ பள்ளி தொடங்குவதற்கு மாநில அரசிடம் அனுமதி பெறத் தேவையில்லை என்று அண்மையில் ஒன்றிய ஆட்சி அறிவித்தது. பாடத்திட்டத்திலும் மும்மொழிக் கொள்கையைத் திணித்து அதிலும் குறிப்பாக சமஸ்கிருத வகுப்புகளைக் கட்டாயம் நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. அதைத் தொடர்ந்து இப்போது உயர்கல்வி முழுவதையும் ஒன்றிய ஆட்சி பறிக்கப் போகிறது.

துணைவேந்தர் நியமனக்குழுவில் பல்கலைக்கழக மானியக் குழு பிரதிநிதியை அனுமதித்து விட்டது தமிழ்நாட்டில் நடக்கும் தவெக ஆட்சி. இப்போது உயர் கல்வியை பறிக்கும் இந்த முயற்சியைத் தடுக்க தமிழ்நாடு அரசு என்ன செய்யப் போகிறது? திமுக நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடுமையாக எதிர்ப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

விஜய் பேச்சும் நீரோ மன்னரும்!

முதலமைச்சர் விஜய் கரூர் பேச்சு ஒரு முதலமைச்சர் தகுதிக்குரிய பேச்சாக இல்லை.மாறாக ஏதோ படை எடுத்து வந்து தமிழ்நாட்டைப் பிடித்து மன்னர் ஆகிவிட்டது போன்ற மனநிலையில் பேசுகிறார். குறிப்பாக கரூர் சம்பவம் குறித்து அவர் உருவாக்கி உள்ள சதி திரைக்கதை வஞ்சகமானது.

ரோம் நகரம் தீப்பற்றி எரிந்த போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டு இருந்தார் என்ற ஒரு வரலாற்று நிகழ்வு உண்டு. தீ பற்றியதற்கு காரணம் மன்னர்தான் என்ற குற்றச்சாட்டு வந்த போது அதை மறைக்க கிறிஸ்தவர்கள் மீது பழி போட்டு அவர்களைக் கைது செய்து பழிவாங்கி தன் குற்றத்தை மறைக்கப் பார்த்தார் என்ற வரலாறு தான் இப்போது நினைவுக்கு வருகிறது.

கரூர் கூட்டத்தில் போலீசார் திட்டமிட்டு தன்னை உள்ளே அனுப்பியதாக அவர் பேசுவதும் அந்தக் கூட்டத்திற்கு ஏன் தடை போடவில்லை என்று கேட்பதும் எதிர்மறையான நேர்மையற்ற பழிச்சொற்கள். இவர்களே கேட்டு அனுமதி வாங்கிய கூட்டத்திற்கு காவல்துறை தடை போட வேண்டும் என்று இதுவரை எந்த ஒரு தலைவரும் பேசியதாக வரலாறு இல்லை. அப்படி தடை போட்டு இருந்தால் இறந்தவர்கள் எண்ணிக்கை இதைவிட கூடுதலாக இருந்திருக்கவும் வாய்ப்புகள் உண்டு.

"நெரிசல் மிகுந்த மேடை போடப்பட்டிருந்த பகுதிக்கு செல்ல வேண்டாம்,அந்தப் பகுதிக்கு முன்பாகவே பேசி விடுங்கள்" என்று காவல்துறை எச்சரித்ததை ஆதவ் அர்ஜுனாவும் அவர்களது சகாக்களும் கேட்க மறுத்து, "ஏற்பாடு செய்த இடத்தில் தான் பேசுவோம்" என்று அடம்பிடித்து பேச வைத்தார்கள். கூட்டத்தில் நெரிசலில் சிக்கி பலர் மயங்கி விழுந்து கொண்டிருக்கும்போதே விஜய் பேசிக் கொண்டே இருந்தார். இது காவல்துறை சதியா அல்லது விஜய் தெரிந்தே நடத்திய சதியா என்று கேட்டால் விஜய் அதற்கு என்ன பதிலைக் கூறுவார்?

விஜய் கட்சிக்கு எதிராக திமுக எந்த ஒரு எதிர் நிலையும் எடுக்கவில்லை என்பதுதான் உண்மை.விஜய் கட்சி ஒரு வலிமையான எதிர்ப்பு சக்தி என்பதை திமுக கருதி பார்க்க வில்லை. அதன் காரணமாகவே தேர்தல் களத்தில் தவெக என்ற கட்சியையோ விஜய் பெயரையோ மு.க.ஸ்டாலின் எந்த ஒரு பிரச்சாரக் கூட்டத்திலும் உச்சரிக்கவே இல்லை. சொல்லப்போனால் விஜய் கட்சி கூடுதல் ஓட்டுகளை வாங்கினால் ஆட்சிக்கு எதிரான ஓட்டுகள் பிரிந்து அது திமுகவுக்கு சாதகமாக இருக்கும் என்பதே திமுகவின் தேர்தல் வியூகமாக இருந்தது. இதனால் விஜய் கட்சிக்கு எந்த இடையூறும் அரசுத் தரப்பில் இருந்து செய்யப்படவில்லை என்பதே உண்மை. கரூர் சம்பவத்திற்குப் பிறகும் விஜய் மீது மு.க.ஸ்டாலின் நேரடி குற்றம் சாட்டவில்லை. புஸ்ஸி ஆனந்தையும் விஜயையும் கைது செய்வதற்கான நியாயமான காரணங்கள் இருந்தும் கைது செய்யவில்லை.

அதே கரூர் கூட்டத்தில் பேசிய விஜய் காவல்துறை சிறப்பான ஏற்பாடுகள் செய்ததைப் பாராட்டினார். இப்போது சதித்திட்டம் புரியாமல் பாராட்டியதாக நாடகமாடுகிறார். சதி நடந்தது என்பதற்கு என்ன ஆதாரங்களை ஒரு முதலமைச்சர் என்ற முறையில் அவர் திரட்டி வைத்திருக்கிறார்? அந்த ஆதாரங்களை ஏன் கரூர் கூட்டத்தில் பேசவில்லை?

உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு அதற்குப் பின்னால் உண்மைகளை மறைக்க முடியும் என்ற கடந்த கால மன்னர் ஆட்சி திரைப்படக்கதைகளை இப்போது மக்கள் நம்ப மாட்டார்கள்.

-விடுதலை இராசேந்திரன்,
11.07.26

சென்னையில் ராயப்பேட்டை, வேளச்சேரி, மடிப்பாக்கம், கிண்டி உள்ளிட்ட பகுதிகளில் கழகத் தோழர்கள் தொடர்ச்சியாக சுவரெழுத்துப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கழக வளர்ச்சி நிதி

தஞ்சை மாவட்டக் கழகத் தோழர் சார்கோட்டை இளங்கோவன் அவர்களை 09.06.26 வியாழக்கிழமை அன்று பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம், திருப்பூர் அய்யப்பன் ஆகியோர் நேரில் சென்று நலம் விசாரித்தனர். அப்போது குடந்தை கழக ஒன்றிய அமைப்பாளர் சா. வெங்கடேசன் இணையர் வைக்கம் தங்களது புதிய இல்லம்"பெரியார் இல்லம்" திறப்பின் மகிழ்வாக புரட்சிப் பெரியார் முழக்கம் வளர்ச்சிக்கு ரூ.5,000 நன்கொடை வழங்கினார்.

தாமரை நன்கொடை

கழக செயல்பாட்டாளர் தோழர் கடலூர் தாமரை கழக வளர்ச்சிக்கு ரூ.8,000 நன்கொடையாக வழங்கினார். -(நன்றியுடன் பெற்றுக்கொண்டோம் ஆசிரியர்)

இழிவில் பிறந்தது ஜாதி – பெரியார்

வெவ்வேறு வர்ணத்தவருக்கு இடையே நடந்த கலப்பு உறவின் காரணமாகத் தான் ஜாதியே பிறந்தது. இது குறித்து 'விபச்சாரத்தில் பிறந்த ஜாதி' எனும் தலைப்பில் பெரியார் எழுதிய கட்டுரை.

ஜாதிப் பிரிவும் வித்தியாசங்களும் இருக்கக் கூடாதென்பது இந்தியாவின் ஒருமுகப்பட்ட அபிப்பிராயமென்பதும், கோரிக்கையென்பதும் நாம் சொல்லாமலே விளங்கும். பொதுவாகப் பார்க்கும் போது போதிய உலக ஞானமற்ற மக்களுக்கு ஜாதிப் பிரிவுகளை ஒழிப்பது என்றால் பிரமாதமாகத் தோன்றுவதும், சிலருக்கு ஏதோ குடிமுழுகிப் போவது போல் அவர்கள் மனதிற்குப் பெரிய திகில்கள் உண்டாவதும் சகஜமாகக் காணப்படுகின்றன. ஆனால் இவையெல்லாம் ஜாதி என்பதன் உண்மையும், உற்பவமும் இன்னதென்று அறியாத மயக்கத்தினால் தோன்றப்படுவதே தவிர வேறில்லை.

ஒரே நாட்டு மக்கள் பிறவியில் பல ஜாதியாகப் பிரிக்கப்பட்டிருப்பது நமது இந்தியாவில்தான் இருக்கின்றதே தவிர வேறெங்கும் இல்லை என்பது உலகக் கல்வி ஞானமுடையவர்கள் யாவரும் அறிந்ததாகும். அந்தப்படி இந்தியாவில் பிரிக்கப்பட்டிருக்கும் ஜாதியும் எவ்வித கொள்கைக்கும் பொருத்தமில்லாமல் வெறும் பிரிவுக்கும் இழிவுக்கும் மாத்திரம் ஆதாரமாய் இருப்பதைத் தவிர மற்றபடி அவற்றால் யாதொரு பயனும் இல்லாமல் இருப்பதும் யாவரும் அறிந்ததாகும். எனவே இப்படிப்பட்ட ஜாதி உயர்வும் தாழ்வும் எப்படி ஏற்பட்டதென்றும் இதற்கு ஆதாரம் என்ன என்பதையும் சற்று கவனிப்போம்.



பொதுவாக 'ஜாதி' என்பது 'இந்துக்கள்' என்பவர்களுக்குள் ஆரியக் கொள்கைகளுக்கு அடிமைப்பட்டவர்களுக்குள் மாத்திரம்தான். "கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது" என்கின்ற கொள்கையின் மீது நான்கு வருணங்களாக அதுவும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவை முறையேஒன்றுக்கொன்று தாழ்ந்ததாகவும் கடைசி ஜாதி என்பது மிக்க இழிவானதாகவும் கருதப்படுவதாக குறிக்கப் பட்டிருக்கின்ற விபரம் யாவரும் அறிந்ததேயாகும். இப்படி இருந்தாலும் இப்போது அநேக ஜாதிகள் இருப்பதற்கு என்ன காரணம் என்று கவனித்துப் பார்ப்போமானால் அதற்குக் கிடைக்கும் சமாதானம் மிகமிக இழிவைத் தரத்தக்கதாகவே இருப்பதை உணரலாம். அதாவது "ஆதியில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட நான்கு வருணத்தாரும் தங்களில் ஜாதி முறை தவறிக் கலப்பு விவாகம் செய்து கொண்டதாலும் கலப்பு விபச்சாரம் செய்து கொண்டதாலும் ஏற்பட்ட பிரிவு"களென்றும், அப்படிப் பட்ட பிரிவுகளுக்குப் பஞ்சம ஜாதியார்கள் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றதென்றும் ஆதாரங்களில் இருக்கின்றன.

அப்படிச் சொல்லப்படுவதிலும் இப்பஞ்சம ஜாதிகள் என்பது இப்போது நமது நாட்டில் பெரும்பான்மையாய் இருக்கும் பல முக்கியமான ஜாதிக்காரர்கள் என்பவர்களே பெரிதும் இந்த விபச்சாரப் பெருக்கால் ஏற்பட்ட பஞ்சம ஜாதிகள் என்றே காட்டப்பட்டிருக்கின்றன. அந்த விபரத்தை, தமிழ் அகராதியில் உள்ளபடி மற்றொரு பக்கம் பிரசுரித்திருக்கின்றோம். ஆகவே அதில் உதாரணமாக, இன்று தமிழ் நாட்டில் பிரபல ஜாதியும் பிரமுக ஜாதியும் என்று சொல்லிக் கொள்ளப் படுவதான வேளாள ஜாதியார் எனப்படுபவர்களே பஞ்சம ஜாதியில் சேர்ந்தவர்கள் என்றும், பஞ்சம ஜாதியிலும், பிராமணன் க்ஷத்திரிய குலப்பெண்ணை சோரத்தால் கலந்ததால் பிறந்தவர்கள் என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களில் இந்தப்படியான 'வேளாளர்' என்பவர்களில் விவசாயம் செய்பவர்களாயிருந்தால் அவர்களுக்கு 'காணியாளர்' என்று பெயர் என்றும், மற்றபடி "சிற்றரசு, மந்திரித்துவம்" முதலிய பதவிகளில் இருப்பவர்களாயிருந்தால் அவர்களுக்கு வேளாண் சாமந்தர் என்கின்ற பெயர் என்றும் குறிக்கப்பட்டிருப்பதுடன் இவற்றிற்கு ஆதாரம் சுப்பரபோதகம், பிரம்ம புராணம், வைகாநசம், மாதவியம், ஜாதி விளக்கம் என்கின்ற நூல்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

தவிர, மேல்கண்ட பிராமண ஜாதி ஆண், க்ஷத்திரிய ஜாதிப் பெண்ணை விவாகம் செய்து கொண்டதால் பிறந்த பிள்ளைகளே 'சவர்ணர்' எனவும் 'தெலுங்கர்' எனவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதாவது இது தெலுங்கு பாஷை பேசும் தெலுங்கு தேசத்தவர் அனைவரையும் குறிப்பிடத்தக்கதாகவே குறிக்கப்பட்டு இருக்கிறது. அதுபோலவே பிராமணன் வைசியப் பெண்ணுடன் கல்யாணத்தால் பிறந்த பிள்ளை 'அம்பட்டன்' என்றும். சோரத்தால் பிறந்த பிள்ளைகள் 'குயவர்' என்றும் 'நாவிதர்' என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றது. அதுபோலவே பிராமணன் சூத்திரப் பெண்ணுடன் கல்யாணத்தால் பிறந்த பிள்ளை 'பரதவர்' அதாவது 'செம்படவர்' என்றும், சோரம் செய்ததால் பிறந்தவர் 'வேட்டைக்காரர்' அதாவது 'வேடுவர்' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

பிராமணப் பெண்ணுடன் சூத்திரன் விபச்சாரம் செய்ததால் பிறந்தவர்கள் 'சண்டாளர்கள்' என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. பிராமண குலப் பெண்களுடன் சண்டாளர் கூடிப் பிறந்த பிள்ளைகள் 'சருமகாரர்' அதாவது 'சக்கிலிகள்' என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. க்ஷத்திரிய குலப்பெண்ணுடன் சண்டாளர் முதலியவர்கள் சேர்வதால் பிறந்த மக்கள் வேணுகர் (அதாவது வேணுகானம் செய்பவர்களும்) கனகர் (அதாவது தங்க வேலை செய்பவர்களும்) சாலியர் (அதாவது சாலியர் முதலிய நெசவு வேலை செய்வோர்களும்) ஆவார்கள் என்றும் கூறப்பட்டு இருக்கின்றன.

இந்த மாதிரி "கீழ் மேல்" ஜாதிகள் கலந்து கலந்து வந்ததால் ஏற்பட்ட ஜாதிகளில் ஒன்றாகிய அயோவகச் ஜாதிப் பெண்ணிடம் நிடாதனுக்குப் பிறந்த பிள்ளைகள் 'பார்க்கவர்கள்' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்தப்படியேஇப்போது அமுலில் உள்ள ஜாதிகளையெல்லாம் குறிக்கும்படியாகவே இன்னும் அநேக விஷயங்கள் காணப்படுகின்றன. இதுபோலவே இன்னும் இரண்டொரு ஆராய்ச்சி நூல்களில் அதாவது அபிதான கோசம். அபிதான சிந்தாமணி முதலியன எழுதிய எல்லா இந்துப் பண்டிதர்களாலும் ஆதாரமாய் கொண்டாடப்படும் புத்தகங்களில், மற்றும் பல ஜாதிகளை இதைவிடக் கேவலமாகவும் குறிக்கப்பட்டிருக்கின்றதோடு நான்கு ஜாதி தவிர மற்ற ஜாதிகள் எல்லாம் மேல் கண்ட நான்கு ஜாதிக்குள் மேல் கீழாகவும், கீழ் மேலாகவும் கல்யாணம் செய்தும், விபசாரம் செய்தும் பிறந்த பிள்ளைகளாக ஏற்பட்டவர்கள் என்றே கூறப்பட்டிருக்கின்றன. செட்டியார்மார்களையும் ஆசாரிமார்களையும் பற்றி மிக மிக இழிவாகவே கூறப்படுகின்றது. ஆகவே ஜாதியைக் கட்டிக் கொண்டு அழுவது இவ்விழிவுகளை மறைமுகமாய் ஏற்றுக் கொள்ளுவதையே ஒக்குமென்பதைத் தவிர வேறில்லை. உண்மையில் யாருக்கு யார் பிறந்திருந்தாலும் அதனாலேயே குற்றம் சொல்வதற்கில்லை என்பது நமது கொள்கையானாலும் ஒரு இழிவைக் கற்பித்து அதை நம் மக்கள் மீது சுமத்தி ஒரு பெரிய சமூகம் நிரந்தரமாய் அடிமையாயும் காட்டுமிராண்டியாயும் இருப்பதற்குச் செய்த காரியமே ஜாதிப்பிரிவும் பாகுபாடும் என்பதை எடுத்துக் காட்டவும் அவ்விதம் கொடுமையை ஒழிப்பதற்காகவுமே இதை எழுதுகிறோம்.

(குடிஅரசு தலையங்கம், 16.11.1930)

'தாலி செண்டிமெண்ட்' தேவைதானா?

தாலி செண்டிமெண்டை ஓவராகத் திரைப்படங்களிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் காட்டுவதால் சில பெண்களிடையே வேறுமாதிரியான பாதிப்பு உண்டாவதை நான் கவனித்திருக்கிறேன். தாலி என்பதைக் கணவனின் மறுபிம்பமாகக் கருதி கண்களில் ஒற்றிக்கொள்கிறோம், குங்குமம் வைக்கிறோம், கணவன் இறந்த பிறகு தாலி அணியக் கூடாது என்றும் சொல்கிறோம். இந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்வதால் ஓர் எதிர்மறை சிந்தனை சிலரிடம் உண்டாகிறது. 'ஒரு மலர் ஒரு முறைதான் பூக்கும், கணவன் கட்டிய தாலி என்னுடைய உடம்பில் ரத்த நாளங்களாக இருக்கிறது' என்றெல்லாம் வசனங்களை அமைத்துவிடுவதால் கணவனை இழந்த அல்லது விவாகரத்து ஆன சில பெண்கள் மறுமணம் செய்துகொள்ளவே தயங்குவது எனக்குத் தெரியும்.

படங்களில் தாலி செண்டிமெண்ட் வைத்து அதைப் பெண்களைப் பார்க்க வைப்பதன் மூலம் நன்றாக வியாபாரம் ஆகிறது எனப் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால், இதே தாலி செண்டிமெண்ட் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட விதத்தில் எதிர்மறையாகப் பெண்களைப் பாதிப்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். மறுமணங்கள் அதிகரித்துவிட்ட இந்தக் காலத்திலும் கணவனை இழந்த, விவாகரத்தான இளம்பெண்கள் மறுமணம் செய்துகொண்டால் தங்கள் புனிதத்தன்மை போய்விடுமோ என்கிற பயத்தில் மறுதாலி கட்டிக்கொள்ள மறுப்பதையும் நாம் ஆங்காங்கே பார்க்கிறோம்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண் கணவரை இழந்தவர். சரியான வருமானம் இல்லாமல் தவித்தவருக்கு எப்படியோ யார் மூலமாகவோ சீரியலில் நடிக்க வாய்ப்பு வந்தது. படப்பிடிப்பு தளத்துக்கு வந்து காட்சிகளையும் வசனங்களையும் பார்த்தவர் நடிக்க மறுத்துவிட்டார். ஏனென்றால், அவருக்குத் திருமணம் நடைபெறுவது போல அன்றைய காட்சி உருவாக்கப்பட்டிருந்தது. "கணவர் மறைந்துவிட்டாலும் அவர் நினைவிலேயே வாழும் எனக்கு இந்த மாதிரி காட்சியில் நடிப்பது அவருக்குத் துரோகம் செய்வதைப் போன்றது. என்னால் முடியாது" என்று சொல்லி படப்பிடிப்புத் தளத்தை விட்டு வெளியேறி, தன் வருமானத்தை இழந்தார். கணவரே இல்லை. பிறகு எப்படி அவருக்குத் துரோகம் செய்ய முடியும்? அந்தப்பெண் ஏனோ இந்த விதமாகச் சிந்திக்கவே இல்லை.

படங்களில் தாலி செண்டிமெண்ட் வைத்து அதைப் பெண்களைப் பார்க்க வைப்பதன் மூலம் நன்றாக வியாபாரம் ஆகிறது. ஆனால் இதே தாலி செண்டிமெண்ட் எதிர்மறையாகப் பெண்களைப் பாதிப்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கணவர் இறந்த பிறகும் அவரை நினைத்துக்கொண்டே வாழ்வதுதான், ஒரு பெண்ணின் விருப்பம் என்றால் தாராளமாக அப்படியே வாழட்டும். தவறே இல்லை. ஆணுக்குக் கிடைக்கிற எல்லாமே பெண்ணுக்கும் கிடைப்பதுதானே சமூகநீதி? அது கிடைக்கிற காலத்தில் அதற்கு எதிரான சிந்தனைகளை விதைப்பது தவறு.

ஆனால், இன்னொரு துணையோ வழிகாட்டியோ தேவை, நான் சாய்ந்துகொள்ள ஒரு தோள் அவசியம், என் குழந்தைகளை வளர்க்க ஒரு துணை வேண்டும் என்று ஓர் ஆணோ ஒரு பெண்ணோ நினைத்தால் அதற்கெல்லாம் தடைபோடுவது போலத் திரைப்படங்களிலும் சீரியல்களிலும் தாலி செண்டிமெண்டை வலியுறுத்தக் கூடாது.

ஒரு பெண் விதவைக்கோலம் பூணுவதைக்கூட ஏன் இப்படி விலாவாரியாகக் காட்ட வேண்டும்? அந்தப் பழக்கமெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகின்றன. அவை இன்னும் அடியோடு அழிய வேண்டும் என்று பெண்கள் அமைப்புகள் குரல்கொடுத்து வருகிற நிலையில் பொட்டை அழிப்பது, வளையலை உடைப்பது, வெள்ளைப்புடவை உடுத்துவதுமாக ஏன் உருக்கமாகக் காட்சி அமைக்க வேண்டும்? இப்போதெல்லாம் யாரும் வெள்ளைப்புடவை உடுத்துவதில்லையே. காலம் மாறிவிட்ட பிறகும் ஏன் இந்தப் பிற்போக்குச் சிந்தனைகளைப் பொழுதுபோக்கு ஊடகங்கள் வாயிலாக மக்களிடையே பரப்ப வேண்டும்? ஆணுக்குக் கிடைக்கிற எல்லாமே பெண்ணுக்கும் கிடைப்பதுதானே சமூகநீதி? அது கிடைக்கிற காலத்தில் அதற்கு எதிரான சிந்தனை களை விதைப்பது தவறு.

நம்மிடம் சொல்லப்படும் எதையும் பகுத்தறிந்து, சிந்தித்து, விளக்கம் கேட்டு ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, 'சமுதாயம் என்ன சொல்லுமோ' என்கிற பயத்தில், தயக்கத்தில் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கக் கூடிய மறுமணத்தை மறுத்த நபர்களை நான் அறிவேன். என் எழுத்தாள நண்பர் ஒருவர் திருமணமான மறுவாரத்தில் இருந்தே தாலி அணிவதில்லை. அதை அவர் வெளிப்படையாக அறிவிக்கவும் செய்தார். பல ஆண்டுகள் குழந்தைகளோடு மகிழ்ச்சியோடுதான் அவர் வாழ்ந்தார். அவரது வெளிப்படைத்தன்மையை நான் பாராட்டுகிறேன். தாலியில் குங்குமம் வைப்பது உங்களுக்குப் பிடிக்கிறதா? கட்டாயம் செய்யுங்கள். அதேநேரம் யாராவது, 'நான் தாலி அணிவதில்லை. அதில் எனக்கும் என் கணவருக்கும் நம்பிக்கை இல்லை' என்று சொன்னால் அவரையும் நாம் மதிக்க வேண்டும்.தாலிக்குத் தினமும் குங்குமம் வைத்து வணங்கும் ஒரு பெண் வடநாட்டுக்கு மாற்றலாகிச் சென்ற பிறகு வீட்டை விட்டு வெளியே செல்லும்போதெல்லாம் தாலியைக் கழற்றி வைத்துவிட்டுச் செல்வார்.

ஏன் என்று கேட்டதற்கு, "இங்கே வெளியே செயின் பறிப்பு சம்பவங்கள் நிறைய நடப்பதால் நான் தாலிசெயினைக் கழற்றி வைத்துவிட்டுத்தான் வெளியே செல்வேன்" என்றார். எனக்குச் சிரிக்கத் தோன்றியது. மனதளவில் நிஜமாகவே நாம் தாலியை மதிக்கிறோமா அல்லது அது உருவாக்கப்பட்டிருக்கும் தங்கத்தை மதிக்கிறோமா?

(எழுத்தாளர் சிவசங்கரி 'தமிழ் இந்து' நாளேட்டில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி)

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

பரப்புரை; சேலம், திருப்பூர் மாவட்டங்கள் தீவிரம்!

சேலம்: *06.07.2026 திங்கள் மாலை 4.00 மணிக்கு கருப்பூரில் சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் இல்லத்தில், மாநில அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி தலைமையில், சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார் முன்னிலையில் நடைபெற்றது.*

கலந்துரையாடல் கூட்டத்தில் கடந்த 28.06.2026 அன்று திருப்பூரில் நடைபெற்ற தலைமைக்குழு தீர்மானங்களின் அடிப்படையில் விவாதிக்கப்பட்டது.

சேலம் மாவட்டக் கழகத்தின் சார்பில் தென்மாவட்டங்களுக்கு பரப்புரை பயணம் மேற்கொள்வது குறித்தும், பயணக் குழுவின் தொடக்க நிகழ்வாக 05.08.2026 அன்று மாலை 4.00 மணிக்கு சேலம் ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து பரப்புரையை சேலம் தாதகாப்பட்டி கேட் பகுதியில் தொடங்குவது எனவும், அதன்பிறகு பரப்புரைக் குழு நாகர்கோவில் சென்றடைந்து காரைக்குடி நிறைவு விழா மாநாட்டு திடலை 12.08.2026 அன்று வந்தடையும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதிகாரத்தில் கால் பதிக்காத குரலற்றசமூகங்களின் உரிமைக்கு கருத்தரங்குகள் நடத்துவது, தந்தை பெரியார் பிறந்தநாளை குடும்ப விழாவாக நடத்துவது, பிரச்சார அணுகுமுறை, நன்கொடை திரட்டுதல், பயணப் பெயர் பட்டியல் தயாரிப்பு ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டது. சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. கலந்துரையாடல் கூட்டத்தில் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி பொறுப்பாளர்கள் பிரபாகரன், தங்கதுரை, வெற்றிமுருகன், தமிழ்நாடு மாணவர் கழக பொறுப்பாளர்கள் நாகராஜ், கவியரசு, கோகுல், கொளத்தூர் நகரச் செயலாளர் அறிவுச்செல்வன், வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர், சிந்தாமணியூர் பகுதி தலைவர் ரவிக்குமார், செயலாளர் ஜெயபிரகாஷ், அருண்பாண்டியன், பாலாஜி, தோழர் இளங்கோவன், சேலம் மாநகர பொறுப்பாளர்கள் தேவராஜ், பிரபு, ஆத்தூர் நகரச் செயலாளர் கணபதி, மேட்டூர் அம்ஜத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருப்பூர்: *மாவட்டக் கழகத்தின் ஆலோசனைக் கூட்டம் 06.07.26 திங்கட்கிழமை மாலை 05.00 மணிக்கு வீரபாண்டி பிரிவு பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது. ஆலோசனைக் கூட்டத்திற்கு கழகப் பொருளாளர் துரைசாமி தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் முகில்ராசு முன்னிலை வகித்தார்.*

கழக சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன் தலைமைக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து தோழர்கள் மத்தியில் எடுத்துரைத்தார். அடுத்ததாக தலைமைக் குழு தீர்மானங்களை செயல்படுத்துவது குறித்த வேலைத் திட்டங்களை கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு ஆகியோர் தோழர்கள் முன் வைத்தார்கள்.அதனை தொடர்ந்து கலந்து கொண்ட தோழர்கள் தங்களின் பல்வேறு கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள். அதன் அடிப்படையில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1) எண்ணிக்கை, பொருளாதார பலமும் இல்லாமல் இருக்கிற உடைவெளுத்தல், சவரம் செய்தல், கல் உடைத்தல், கூடை முடைதல், குதிரை வண்ணார் போன்றோர் ஒவ்வொரு கிராமத்திலும் 50-க்கு மிகாமல் வாழ்ந்து கொண்டிருக்கிற ஜாதிகளாய், ஊராட்சி மன்றத்தில் உறுப்பினராகக் கூட வரமுடியாத நிலையில், தங்கள் கருத்துக்களை - கோரிக்கைகளை சமூகத்தின், அரசின் காதுகளுக்கு எட்டச் செய்யும் வலிமையும் அற்றவர்களாக - சீர் மரபினர் (DNC/DNT) என்று பட்டியலிடப்பட்டுள்ள ஜாதியினரும் - இன்று வரை அரசியல் அதிகாரமோ, அரசுப் பதவிகளையோ பெறும் வாய்ப்பே கிட்டாதவர்களாக அமிழ்த்தபட்டுக் கொண்டிருக்கும் மக்களின் பாடுகளைப் பொதுச் சமூகத்தின் பார்வைக்கு கொண்டு வந்து அவர்களுக்கான உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் நோக்கத்துடன் "குரலற்ற மக்களின் குரலாக" ஒலிக்கும் வகையில் கழகத்தின் சார்பில் அம்மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி, தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் கருத்தரங்குகள் நடத்தப்படும் என தலைமைக் குழு தீர்மானம் நிறைவேற்றி இருப்பதற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் பாராட்டுக்களும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

2) மாற்றத்தை நோக்கிய வாழ்வியல் பரப்புரை!"-சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு! எனும் தலைப்பில், தமிழ்நாட்டின் மூன்று முனைகளில் இருந்து புறப்படும் பரப்புரை பயணத்திற்கு திருப்பூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் பேராவூரணியிலிருந்து தொடங்கும் பரப்புரைப் பயணத்தில் பங்கேற்று சிறப்பாக நடத்துவது எனவும் அதில் பங்கேற்க வாய்ப்புள்ள தோழர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டனர். தொடக்க விழா மற்றும் நிறைவு விழா மாநாட்டிற்கு திருப்பூரில் இருந்து பெரும் திரளாக தோழர்கள் கலந்து கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

3) செப்டம்பர்-17 தந்தை பெரியாரின் பிறந்த நாளை குடும்ப விழாவாக முன்னெடுப்பது என்று தீர்மானித்துள்ள தலைமைக் குழுவின் முடிவின் அடிப்படையில் திருப்பூர் மாவட்ட கழகத்தின் சார்பில் கழகக் குடும்பத்தினரை ஒருங்கிணைத்து பெரியார் பிறந்த நாள் குடும்ப விழாவை மிகச் சிறப்பாக நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் மாநகரச் செயலாளர் மாதவன், மாநகரத் துணைத் தலைவர் மாரிமுத்து, தெற்கு பகுதி பொறுப்பாளர் இராமசாமி, மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் கணக்கன், ஒன்றியச் செயலாளர் சிவானந்தம், வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன் குணா ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர். நிறைவாக ஆறுமுகம் நன்றி கூறினார்.

சேலத்தில் ஆணவப் படுகொலைக்குகண்டனம்

மயிலாடுதுறையில் நடந்த ஜாதி ஆணவப் படுகொலையைக் கண்டித்தும், ஜாதி ஆணவப் படுகொலையைத் தடுக்கும் சிறப்புத் தனிச்சட்டம் இயற்ற வேண்டும் என்றும் கண்டன ஆர்ப்பாட்டம் 07.07.2026 செவ்வாய்க்கிழமை காலை 10:30 மணிக்கு சேலம் கோட்டை மைதானத்தில் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ-மா) சார்பில் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

அவர் தன் உரையில் "இந்தியா முழுவதும் ஜாதி மீறி காதலிக்கும் ஒரே காரணத்திற்காக ஜாதி கௌரவம் என்னும் பெயரில் காதலர்கள் காதல் இணையர்கள் கொடூரமாக கொல்லப்படுவது அதிகரித்து வருகிறது. இந்தியாவில் நாளொன்றுக்கு 4 ஆணவக் கொலைகள் நடப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 500-க்கும் மேற்பட்ட ஜாதி ஆணவக் கொலைகள் நடந்து இருக்கின்றன. இவை அனைத்திற்கும் ஒரே காரணம் மனு சாஸ்திரத்தை இந்து மதத்தவர்கள் படிக்காமல் இருக்கலாம்; ஆனால் அவற்றின் இதிகாசபுராணக் கதைகள் ஆகியவை அவற்றை நம் ஆழ்மனதில் பதிய வைத்திருக்கிறது. இவற்றை வளர்த்தெடுப்பதற்காகவே இந்த ஜாதிய வேறுபாடு ஜாதிய ஆணவப் படுகொலைகளை செய்கிறார்கள்"என்று குறிப்பிட்டார்.



தோழர் ஆம்ஸ்ட்ராங் 2-ம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வில் ஜூலை-5 அன்று வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன் பங்கேற்று உரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் ந. தட்சிணாமூர்த்தி, ராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

நங்கவள்ளி கழகத் தோழர்களின் சிறப்பான செயல்!

நங்கவள்ளி ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப்பள்ளி சுற்றுச்சுவரில் தலைவர்களின் படங்கள் வரையப்பட்டன. அதில் தந்தை பெரியார் மற்றும் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் படங்களை மட்டும் பெயர் பட்டியலில் இருந்தும் அவற்றை வரையாமல் தவிர்த்தனர்.கழகத் தோழர்கள் நங்கவள்ளி கிருஷ்ணன், சந்திரசேகரன், உமாசங்கர், மனோஜ் ஆகியோர் பள்ளியின் தலைமையாசிரியர் அவர்களிடம் இதுகுறித்து வலியுறுத்தினர். நமது கோரிக்கையை ஏற்று தந்தை பெரியார் மற்றும் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் படங்கள் வரையப்பட்டது. கடந்த ஒரு வாரமாக நடந்த வரையும் பணி 10.07.2026 அன்று முடிவடைந்துள்ளது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted :July 16, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran